## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 61/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 26.06.2025.**

| | |
|---|---|
| **Name : சம்புவள்ளி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் புதூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். நான் பருவந்தெருவில் மேல் மாடியில் குடியிருந்து வருகிறேன். என் மகன் ரமேஷ் இறந்து நான்கு வருடமாகிறது. என் மருமகள் பெயர் சங்கீதா, அவரது பெற்றோர்களான சின்னதங்கம், பழனிசாமி அழைத்து வந்து வீட்டில் வைத்து விட்டார்கள். கடந்த 10 மாதத்திற்கு முன்பாக காலை 7 மணிக்கு நான் மேல்மாடியில் இருந்த போது கீழே இருந்த சங்கீதா, தங்ம்மாள் இருவரும் குப்பையை அள்ளிக் கொண்டு மேலே வந்து நான் குடியிருக்கும் இடத்தில் வாசற்படி முன் கொட்டினார்கள்.

2) நான் ஏன் கொட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு அப்படி தான்டி கொட்டுவோம். இது என் கணவர் கட்டிய வீடு நீ காலி செய் என்று சொல்லி தேவிடியா என்று கெட்ட வார்த்தையால் பேசினார்கள். குரல் வலையை சங்கீதா பிடித்தும், எனது இடது கை கட்டைவிரலில் சங்கீதா மற்றும் தங்கமாள் அடித்தார். கட்டையால் கையில் அடித்து பிறகு காலால் எட்டி உதைத்து, முதுகில் கட்டையால் அடித்து என்னை கீழே தள்ளினர். பின்னர் நான் சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன்.

3) காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். என்னை அடிக்க பயன்படுத்திய கட்டையை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் கட்டையால் தான் என்னை அடித்தார்கள். இரண்டு கட்டைகள் **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 61/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 26.06.2025.**

| | |
|---|---|
| **Name : பிரபு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் பருவந்தெருவில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1 என் தாயார் ஆவார். அ.சா.1 என் வீட்டு பக்கத்தில் உள்ள என் அண்ணன் வீட்டின் மேல் மாடியில் குடியிருந்து வருகிறார். என் அண்ணன் ரமேஷ் இறந்து நான்கு வருடமாகிறது. ஆஜர் எதிரிகள் சங்கீதா எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் மனைவி ஆவார். அவரது பெற்றோர்களான சின்னதங்கம், பழனிசாமி ஆகியோர் 1ம் எதிரியின் பெற்றோர்கள் ஆவார். என் அண்ணன் இறந்த பிறகு 1ம் எதிரி வீட்டில் தான் அவர்களும் குடியிருந்து வருகிறார்கள். கடந்த 30.09.2024ம் தேதியன்று காலை 7 மணிக்கு அ.சா.1 மேல்மாடியில் இருந்த போது கீழே இருந்த சங்கீதா, அவரது தாய் தங்கம்மாள் இருவரும் குப்பையை அள்ளிக் கொண்டு மேலே வந்து என் அம்மா குடியிருக்கும் இடத்தில் வாசற்படி முன் கொட்டினார்கள்.

2) என் தாயார் ஏன் கொட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு இது என் கணவர் கட்டிய வீடு நீ காலி செய் என்று சொல்லி தேவிடியா என்று கெட்ட வார்த்தையால் பேசினார்கள். கட்டையால் எதிரிகள் இருவரும் அ.சா.1யை இடது கை விரலில் அடித்து அசா.1யை கீழே தள்ளினார்கள். பின்னர் நான் என்

தாயாரை சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 61/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 26.06.2025.**

| | |
|---|---|
| **Name : சுமதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பருவந்தெருவில் குடியிருந்து வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 என் மாமியார் ஆவார். கடந்த 30.09.2024ம் தேதி காலை 7 மணியளவில் சங்கீதா வீட்டிற்கு கீழே உள்ள குப்பையை என் மாமியார் அ.சா.1 குடியிருக்கும் மேல் மாடி வாசற்படி முன்பு குப்பையை கொட்டினார். எதற்காக என் வீட்டு வாசலில் குப்பையை கொட்டினாய் என அ.சா.1 கேட்டதற்கு சங்கீதா இது என் புருஷன் கட்டின வீடு நான் அ ப்படி தான் கட்டுவேன் நீ எதற்கு இங்கு குடியிருக்கிறாய் தெவுடியா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்.

2) சங்கீதா என் மாமியார் அ.சா.1ன் கழுத்தை பிடித்து அடித்து, வயிற்றில் காலால் எட்டி உதைத்தார்கள். அங்குள்ள விறகு கட்டையை எடுத்து மாமியாரின் இடது கையில் அடித்து அப்போது அங்கு வந்த தங்கம்மாள் இது என் பிள்ளை வீடு நீ எதற்கு இங்கு குடியிருக்கிறாய் என்று அ.சா.1யை கட்டையால் முதுகில் அடித்தார். வீட்டை காலி செய்யவில்லை என்றால் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். நான், என் கணவர், அக்கம் பக்கம் உள்ளவர்கள் தடுக்க சென்ற போது எதிரிகள் இருவரும் அ.சா.1யை வீட்டை காலி செய்யவில்லை என்றால் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி சென்றனர். பிறகு மாமியார்

நடந்த விவரத்தை என்னிடம் சொன்னார். வலிக்குது என்று சொன்னதால் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் என் கணவர் சிகிச்சைக்கு அ.சா.1யை அழைத்து சென்றார். தற்போது என்னிடம் காட்டப்படும் கட்டையால் தான் எதிரிகள் அ.சா.1யை மிரட்டிச் சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 61/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 26.06.2025.**

| Name : மணிகண்டன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 2 present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் பருவந்தெருவில் குடியிருந்து வெல்டிங் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 என் உறவினர் ஆவார். கடந்த 30.09.2024ம் தேதி நான் அன்றையதினம் வேலைக்கு செல்வதற்காக நின்று கொண்டிருந்த போது காலை 7 மணியளவில் அ.சா.1யை எதிரிகள் இருவரும் கெட்ட வார்த்தையால் பேசினார்கள். எதிரிகள் இருவரும் கட்டையால் அ.சா.1ன் இடது கை விரலில் அடித்தார்கள். பிறகு காயம் பட்ட அ.சா.1யை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்றார். தற்போது என்னிடம் காட்டப்படும் கட்டையால் தான் எதிரிகள் அ.சா.1யை அடித்ததாக அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.